**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.20/2022** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 1** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | ராஜேந்திரன் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **18.11.2025**

**1 வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு.**

**முதல் விசாரணை:**

நான் விளாமுத்தூரில் குடியிருக்கிறேன். டிரைவராக இருக்கிறேன். 1வது எதிரி என்னுடைய தம்பி மகனாவர். 2வது எதிரியை தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன பச்சையம்மாள் என்அம்மா ஆவார். நான் பள்ளி பேருந்தை ஓட்டிவருகிறேன். காலை 05.00 மணிக்கு எழுந்து சிறுவாச்சூர் போய் அங்கிருந்து பஸ்சில் ஏறி கொளக்காநத்தம் சென்று பள்ளி பேருந்தை எடுத்துக்கொண்டு ஊர்ஊராக செல்வது வழக்கம். காலை 09.00, 10.00 மணியளவில் என்வேலை முடிந்தவுடன் வீட்டிற்கு வந்துவிடுவேன். வீட்டில் சாப்பிட்டு விட்டு, ரெஸ்ட் எடுத்துவிட்டு திரும்பவும் 03.00 மணிக்கு வேலைக்கு போவேன். திரும்பி வீட்டிற்கு வருவதற்கு சுமார் 06.30, 07.00 மணியாகும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் எப்போதும் போல் வேலைக்கு சென்றுவிட்டேன். கொளக்காநத்தத்திற்கு பஸ்சில் போய்கொண்டிருந்தபோது காலை சுமார் 06.45 மணியளவில் என்ஊரில் இருந்து போன் செய்து அம்மா இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். எனக்கு செய்தி கேட்டவுடன் எனக்கு

ஒருமாதிரியாக இருந்தது. கொளக்காநத்தத்தில் இறங்கி பள்ளிபேருந்தை எடுத்து குழந்தைகளை பள்ளியில் சேர்த்துவிட்டு வந்து, அதன்பின்னர் ஊருக்கு திரும்பி வந்தேன். என்அம்மா இறந்து கிடந்தார். என்அம்மா அந்த சமயத்தில் காட்டில் என்தம்பி வீட்டில் குடியிருந்து வந்தார். அதன்பின்னர் போலிஸ் வந்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ளது என்னுடைய கையெழுத்து. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. என்னுடைய கையெழுத்து அ.சா.ஆ.1, என்அம்மா எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு 2மனைவிகள். அவர்கள் பெரியமனைவியின் பெயர் விஜயலட்சுமி. 2வது மனைவி பெயர் சித்ரா. என்னுடன் உடன் பிறந்தவர்கள் 5பேர்கள். அதில் 3 ஆண்குழந்தைகள், 2 பெண்குழந்தைகள். ஒருவர் மூத்தவர், ஒருவர் இளையவர். இளையவர் இறந்துவிட்டார். இளைவர் வீட்டு முன்பகுதியில் என்அம்மா குடியிருந்தார் என்றால் சரிதான். என்அம்மாவின் ஜீவனத்திற்கு ரூ.1லட்சம் நாங்கள் பணம் கொடுத்து வைத்திருந்தோம். பொதுவில் இருந்த வயலை விற்று அந்த பணத்தை கொடுத்தோம். அந்த பணத்தைஎன்தம்பி வாங்கிவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் நான்அவ்வாறு சொன்னேன் என்றால் சரியல்ல. என்தம்பி மனைவி பெயர் தங்கம். அதே வீட்டில் தான் தங்கம், 1வது எதிரி மற்றும் ஐஸ்வர்யா இருந்தார்கள். ஐஸ்வர்யாவுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவர் கணவர் அதே வீட்டில் குடியிருக்கவில்லை. என்அம்மாவை வீட்டிலிருந்து காலி செய்யவேண்டுமென்று 1வது எதிரி மற்றும் அவர் குடும்பத்தார் தகராறு செய்துவந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. என்அம்மாவை 1வது எதிரி அடித்துவிட்டதை பார்த்து என்மகள் ஆதிலட்சுமி மற்றும் மருமகள் சண்முகம்

ஆகியோர்கள் அவ்வாறு பாட்டியை அடிக்ககூடாது என்று கண்டித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு கண்டித்த அன்று என்றைக்கு இருந்தாலும் கிளவிக்கு என்கையால் தான் சாவு என்று 1வது எதிரி சொன்னார் என்றால் எனக்கு தெரியாது. 20.09.2021ம் தேதி நான் பள்ளியில் பணியில் இருக்கும் போது என்பக்கத்து வயல்காரர் முருகேசன் மற்றும் ஆதிலட்சுமி எனக்கு போன்செய்து பச்சையம்மாள் இறந்து கிடப்பதாக போனில் சொன்னார்கள் என்றால் சரிதான். நான் ஊருக்கு வந்து என்அம்மாவை பார்த்தபோது அவருடைய கழுத்தில் கன்றிய காயம் இருந்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே 1வது எதிரி சொன்னது போன்று அதே நிறைவேற்றி விட்டார் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால்சரியல்ல. 1வது எதிரி அந்த இடத்தில் இருந்துபோய்விட்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால்சரியல்ல. 1வது எதிரி என்தம்பி மகன் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி புகாரிலும், போலிசார்விசாரணையிலும் கூறியுள்ள சங்கதிகளை மாற்றி தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இல்லை.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.